(e) 1. வளிநிரலின் நீளத்தை அளக்கும்போது வெப்பநிலையை மாறாது வைத்திருத்தல்.

11. வெப்பமாக்கி வெப்பநிலை கூடும்போதும், குளிரவிட்டு வெப்பநிலை குறையும்போதும் வாசிப்பைப் பெறுதல்.

111. தொடர்ந்து கலக்குவதன் மூலம் தொட்டியில் சீரான வெப்பநிலையைப் பேணுதல்.

1V. சுவாலையை மட்டுப்படுத்துவதன் மூலம் சீரான வெப்ப நிலையைப் பேணுதல்.



(f) பாவிக்க முடியாது.

பரிசோதனையின் எல்லா வெப்பநிலைகளிலும் அடைக்கப்பட்ட வாயுவின் திணிவு மாறிலியாக இருக்கமாட்டாது. அல்லது அற்ககோல் ஆவியாதலால் பரிசோதனைக்குட்படும் வாயுவின் திணிவு மாறிலியாக இருக்காது.

3. (a) (1) குறுக்குக் கம்பி தெளிவாகத் தெரியும்வரை பார்வைத்துண்டை அசைத்தல் வேண்டும்.

(11) தூரத்தில் உள்ள நிலைக்குத்தான பொருளின் விம்பம் (நிலைக்குத்து) குறுக்குக் கம்பியுடன் இடமாறு தோற்ற வழு இன்றிப் பொருந்தும்வரை செப்பம் செய்தல் வேண்டும்.

(111) தொலைகாட்டியும் நேர்வரிசையாக்கியும் ஒரே நேர்கோட்டில் கொண்டு வந்து, நேர்வரிசையாக்கியில் உள்ள பிளவை தொலைகாட்டியினூடாக நோக்கி நிலைக்குத்தாக இருக்கக் கூடியதாகச் செப்பம் செய்தல்.

பிளவின் தெளிவான விம்பம் நிலைக்குத்தாக் குறுக்குக் கம்பியுடன் இடமாறு தோற்ற வழு இன்றிப் பொருந்தச் செய்தல். (பிளவை இயன்ற அளவு ஒடுங்கியதாகச் செய்தல்)

(b) 1. இரண்டு முறிவு மேற்பரப்புகளிலும் பட்டுத்தெறிக்கும் ஒளியை தொலைகாட்டியினூடாக நோக்கும்போது இடைநிலைக் குறுக்குக் கம்பி சார்பாகப் பிளவின் விம்பம் இருதர்ப்பங்களிலும் சமச்சீராக இருத்தல் வேண்டும்.

11. $2A = 38° 40' + (360 - 278°28')$

$= 120° 12'$

$A = 60° 6'$

(c) 1.



11.



111. $D = 2(i - r)$

$r = A/2 \qquad i = A + D/2$

$\mu = \sin i / \sin r$

$$\mu = \frac{\sin \frac{A + D}{2}}{\sin A/2}$$

(d) மின்விளக்கு வெள்ளொளியைக் காலுகின்றது. பல நிறங்கள் இருப்பதால் இழிவு விலகல் நிலையைத் தெளிவாகப் பெறமுடியாது. (ஒரு நிற ஒளி பயன்படுத்த வேண்டும்.)

4. (a) (1) B l v t

(11) B l v (பாயம் மாறும் வீதம்)

(b) (1)



(11) லென்சின் விதி:- மூடிய சுற்றுடன் தொடர்புள்ள காந்தப் பாயம் மாறும் ஆயின் காந்தப்பாயத்தை மாறிலியாக வைத்திருக்கும் வகையில் அச்சுற்றில் ஒரு மின்னோட்டம் தூண்டப்படும்.

(c) ஆம் இடப்பக்கம் நோக்கி

(d) 1. மின்புலச் செறிவை மாற்றுவதன் மூலம் (நேரத்துடன்)

11. புலம் சார்பாகத் தடத்தைச் சுழற்றுவதன் மூலம்

(e) 1. டைனமோ (11) படிக்குறை மாற்றி

111. படிகூட்டு மாற்றி (1V) தூண்டற் சுருள்

V. காந்த ஒலி பெருக்கி (V1) காந்த ஒலி வாங்கி.

$$$-$$$$$$$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

உரிமை பதிப்பகத்தாருக்குரியது.

உயர் கல்விப் பதிப்பகம்.

36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல் 11, க.பொ.த.(உயர்தரம்) மாதிரிவினாக்கள், ஓகஸ்ட், 1990.
(விசேட - 1991.)

பகுதி B - கட்டுரை

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

$(g = 10\ N\ kg^{-1})$

01. பகுதி (a) யிற்கு அல்லது பகுதி (b) இற்கு மட்டும் விடை தருக.

(a) h உயரமொன்றிலிருந்து ஓய்விலிருந்து சுயாதீனமாக ஒரு பொருள் போடப்படுமாயின், அது 2h உயரத்துக்கு மீள்வதை சாத்தியமாகுமா? உமது விடையை விளக்குக.



ஒரு பொருளானது படத்தில் காட்டப்பட்டுள்ள ABC என்ற உராய்வற்ற வளைந்த பரப்பின்மீது, புள்ளி A யில் ஓய்விலிருந்து சறுக்க ஆரம்பித்துப் பின்னர் தனது இயக்கத்தை சாய்தளம் CD யின் மீதும், கிடைத்தளம் DE இன் மீதும் தொடர்கிறது. இப்பொருளானது எப்போதும் பரப்புடன் தொடுகையிலிருப்பதாகக் கருதி,

(1) புள்ளி C யை அது அடைகையில் அதன் கதியைக் காண்க.

(11) பரப்பு CDE ஆனது கரடானதாயும், உராய்வுக் குணகம் 0.2 ஐ உடையதாயுமிருப்பின், இப்பொருளானது புள்ளி D யை அடையும்போது அதனது வேகத்தைக் காண்க.

(111) இப்பொருள் E இல் ஓய்வுக்கு வருமாயின் தூரம் DE ஐக் காண்க.

(1v) புள்ளிகள் C இற்கும் E இற்குமிடையிலான இப்பொருளின் இயக்கத்தினது கதி-நேர வரையினது பருமட்டான படத்தை வரைக.

(b) குழாய் உருவிலுள்ள றப்பரினது யங்கின் மட்டைத் துணிவதற்கு உமக்குத் தரப்பட்டுள்ள பரிசோதனையொன்றினது முக்கிய படிகளைத் தருக. றப்பருக்கு, நீர் எதிர்பார்க்கும், தகைப்புக்கும் விகாரத்துக்குமிடையிலான தொடர்பைக் காட்டும் பொருத்தமான வரைபொன்றின் பருமட்டான படத்தை வரைக. இக்குழாயை அதன் மீள்தல் எல்லை வரைக்கும் ஈர்ப்பதில் செய்யப்படும் வேலையைக் கணிக்க இவ்வரைபை எங்ஙனம் பயன்படுத்துவீர்? இந்த றப்பர் ஊக்கின் விதிக்குக் கட்டுப்படுவதாகக் கருதுக.

20 cm ஈர்க்கப்படாத நீளத்தையும் $2.5 \times 10^{-5} m^2$ குறுக்கு வெட்டுப் பரப்பையுமுடைய ஈர்க்கப்பட்ட றப்பர் நாணொன்றில் சேகரிக்கப்பட்ட முழுச் சக்தியையும், 250 g திணிவுடைய விளையாட்டு வானமொன்று தனது எறியத்துக்கு பயன்படுத்துகிறது. இவ்வானமானது எறி புள்ளியில் இருந்து 25 m உயரத்திற்கு நிலைக்குத்தாக எறியப்படவேண்டுமாயின், இந்நாணானது நீட்டப்படவேண்டிய நீளத்தைக் காண்க. றப்பரினது யங்கின் மட்டு $8.0 \times 10^8\ Nm^{-2}$ ஆகும்.

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

விடை :-

1.1. இல்லை.

உயரம் h இல் ஆரம்ப மொத்த சக்தி = mgh மோதுகையின் பின்னர் பொருளின் மொத்தச்சக்தி ≤ mgh.. 2 h உயரத்திற்குப் பின்னதைக்க குறைந்தது 2 mgh தேவை. 2 mgh இலும் கூடிய மொத்தச் சக்தியுடையதாயின் மாத்திரம் 2 h உயரம் பின்னதைக்கும்.

(1) C இல் வேகம் V_c எனக.



$$mgh = \frac{1}{2}mV_c^2$$

$$2\ gh = V_c^2$$

$$\sqrt{2 \times 10 \times 0.5} = V_c$$

$$V_c = 10\ m\ s^{-1}$$

$$= 3.16\ m\ s^{-1}$$

(11) உராய்வு விசை = μ mg கோசைα

உராய்வு விசைக்கு எதிராகச் செய்யப்பட்ட வேலை

$$= \mu\ mg\ \text{கோசை}\alpha \cdot CD$$

$$= \mu\ mg \times \text{கோசை}\alpha \times (0.5\sqrt{2})$$

D யில் மொத்தச் சக்தி = mgh

D யில் வேகம் Vd எனக.

மொத்தச் சக்தியைச் சமப்படுத்தும்போது

$$mgh = \frac{1}{2}mV_d^2 + \mu mg \cos\alpha \times (0.5\sqrt{2})$$

$$gh = \frac{1}{2}.V_d^2 + \mu g \cos\alpha\ (0.5 \times \sqrt{2})$$

$$\frac{1}{2}.V_d^2 = gh - \mu g \cos\alpha\ (0.5 \times \sqrt{2})$$

$$= 10 \times 1 - 0.2 \times 10 \times 1/\sqrt{2} \times 0.5 \times \sqrt{2} \quad ; \ (\cos = 1/\sqrt{2})$$

$$V_d^2 = 12 \times 9 = 18$$

$$V_d = 3\sqrt{2} = 3 \times 1.414\ m\ s^{-1}$$

$$= 4.242\ m\ s^{-1}$$

(111) D இலிருந்து E வரை உள்ள தூரம் S எனக.

உராய்வு விசை = μ mg

உராய்வு விசைக்கு எதிராகச் செய்யப்பட்ட வேலை = μ mgS

D இல் ஆரம்ப இயக்கச் சக்தி $= \frac{1}{2} m V_d^2$

$$= \frac{1}{2} m.18$$

சக்திக் காப்பு விதிக்கமைய

$$\frac{1}{2} m V_d^2 = \mu mg S$$

$$18/2 = 0.2 \times 10 \times S$$

$$S = 4.5\ m$$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

(iv)



(b) யங்கின் மட்டைத் துணிவதற்கான ஆய்கூடப் பரிசோதனையின் முக்கிய படிகள்



1. மேல் முனியை ஒரு நிலையான கிடைத் தளத்துடன் இறுக்கமாக இணைக்க.
11. குழாய் நிலைக்குத்தாக நேராக இருக்கத் தக்கதாக வரும்வரை நிறைகளை இடுக. (இந்நிறையைக் ஏற்றும் சுமையுடன் சேர்க்காது விடுக.)
111. சுமையைப் படிப்படியாகக் கூட்டி நீட்சியை அளவிடுக.
1V. சுமையைப் படிப்படியாகக் குறைக்கும்போதும் நீட்சியை அளவிடுக.
V. சுமைக்கு எதிராக நீட்சிக்கு ஒரு வரைபு வரைக.
V1. வரைபின் சாய்வைப் பெறுக.



சாய்வு = $\frac{\text{விசை}}{\text{நீட்சி}}$

1. குழாயின் ஆரம்ப நீளம் மீற்றர் அளவுச் சட்டத்தில் அளவிடப்படும்.
11. அசையும் நுணுக்குக் காட்டியைப் பயன்படுத்திக் குழாயின் உள்விட்டம் வெளிவிட்டம் அளவிடப்படும்.

யங்கின் மட்டு Y $= \frac{\text{தகைப்பு}}{\text{விகாரம்}}$

$$Y = \frac{\text{விசை}}{\text{பரப்பு}} \times \frac{\text{ஆரம்ப நீளம்}}{\text{நீட்சி}}$$

$$Y = \frac{\text{விசை}}{\text{நீட்சி}} \times \frac{\text{ஆரம்பநீளம்}}{\text{பரப்பு}}$$

$$Y = \text{வரைபின் சாய்வு} \times \frac{\text{ஆரம்பநீளம்}}{\text{பரப்பு}}$$

செய்யப்பட்ட வேலை



செய்யப்பட்ட வேலை ஒரு அலகு கனவளவிற்கு $= \frac{1}{2} \times OA \times AB$

செய்யப்பட மொத்த வேலை $= \frac{1}{2} \times OA \times AB \times$ கனவளவு

சேமிக்கப்பட்ட சக்தி $= \frac{1}{2} F.e$

$= \frac{1}{2} \times$ விசை $\times$ நீட்சி

யங்கின் மட்டு $Y = \frac{\text{விசை}}{\text{பரப்பு}} \times \frac{\text{ஆரம்ப நீளம்}}{\text{நீட்சி}}$

விசை $= \frac{Y \times \text{பரப்பு} \times \text{நீட்சி}}{\text{ஆரம்ப நீளம்}}$

சேமிக்கப்பட்ட சக்தி $E = \frac{Y \times \text{பரப்பு}}{\text{ஆரம்பநீளம்}} \times \text{நீட்சி} \times \text{நீட்சி}$

$= \frac{Y \times \text{பரப்பு}}{\text{ஆரம்ப நீளம்}} \times \text{நீட்சி}$

$= Y A e^2/L$

25 m நிலைக்குத்து உயரத்திற்குப் பந்தை எறிவதற்குத் தேவையான சக்தி =

$= mgh$

$= 250 \times 10^{-3} \times 10 \times 25$

ரப்பர் இழையில் ஏற்பட வேண்டிய நீட்சி e எனக.

ரப்பர் இழையில் சேமிக்கப்பட வேண்டிய சக்தி = E

$$E = \frac{1}{2} \frac{YA e^2}{L}$$

$$= \frac{1}{2} \frac{8.0 \times 10^8 \times 2.5 \times 10^{-5}}{20 \times 10^{-2}} \times e^2$$

$E = mgh$

$$\frac{1}{2} \frac{8.0 \times 10^8 \times 2.5 \times 10^{-5}}{20 \times 10^{-2}} \times e^2 = 250 \times 10^{-3} \times 10 \times 25$$

$$5 \times 10^4 \; e^2 = 625 \times 10^{-1}$$

$$e^2 = \frac{625 \times 10^{-1}}{5 \times 10^4}$$

$$e^2 = 12.5 \times 10^{-5}$$

$$e = \sqrt{12.5} \times 10^{-2}$$

$$= 3.54 \times 10^{-2} \text{ m}$$

2. எளிய மூலக்கூற்றுக் கொள்கையைப் பயன்படுத்தித் திரவமொன்றுக்குப் பரப்பு இழுவை உள்ளமையை விளக்குக.

இரு முனைகளிலும் திறந்துள்ளதான கண்ணாடி மயிர்த்துளைக் குழாயொன்று, 1.2×10^4 kg m^{-3} அடர்த்தியையும், 0.5 N m^{-1} பரப்பு இழுவையையும் கொண்ட திரவமொன்றினது சிறு நிரலொன்றைக் கொண்டுள்ளது. இத்திரவத்தினது கண்ணாடியுடனான தொடுகைக் கோணம் 120° ஆகும். இக்குழாயானது நிலைக்குத்தாகப் பிடிக்கப்படும்போது, இச்சிறு நிரல் குழாயின் அடிப்பகுதிக்கு அசைந்து அங்கு தங்கியிருக்கிறது. இத்திரவம் ஏன் குழாயை விட்டுக் கீழே கொட்டப்படுவதில்லையென விளக்குக.

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

நூல் மயிர்த்துளையின் விட்டம் 0.02cm ஆயிருப்பின், நிலைக்குத்து நிலையில் இம்மயிர்த்துளைக் குழாயினுள் வைத்திருக்கக் கூடிய நீர்நிரலின் உயர் நீளத்தைக் காண்க.

விடை:-

2.



திரவ மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சி விசை உண்டு. திரவத்தினுள் உள்ள யாதேனும் ஒரு மூலக்கூற்றைக் கருத்திற் கொண்டால் அது எல்லாத் திசைகளிலும் சமமான விசையால் கவரப்படுகிறது. எனவே A மீது விளையுள் விசை பூச்சியம்.

திரவத்தின் மேற்பரப்பில் உள்ள B என்னும் மூலக்கூறையும் சற்றுக் கீழேயுள்ள C என்னும் மூலக்கூறையும் கருத்திற் கொண்டால் திரவத்தின் மேற்பரப்புக்குக் கீழேயுள்ள மூலக்கூறுகளால் அவை கவரப்படுகின்றன. மேல் பாகத்தில் கவர்ச்சி விசை தொழிற்படுவதில்லை. அதனால் மேற்பரப்பில் உள்ள மூலக்கூறுகளில் ஒரு விளையுள் விசை உள் நோக்கித் தொழிற்படுகின்றது. இம்மூலக்கூறுகள் உள் நோக்கி இயங்கும் போக்கைக் கொண்டிருக்கும். இதன் காரணமாக மேற்பரப்பில் ஓர் இழுவை தொழிற்படுகின்றது. இது மேற்பரப்பிழு விசை எனப்படும்.



மயிர்த்துளைக் குழாயை நிலைக்குத்தாகப் பிடிக்கும்போது அதனுள் உள்ள திரவத்தில் தொழிற்படும் விசைகளைப் படம் காட்டுகின்றது.

மேலே உள்ள மேற்பரப்பில் நிலைக்குத்துக்கு 60° சாய்வில் மேற்பரப்பிழுவை கீழ்நோக்கித் தொழிற்படுகின்றது.

தொடுகைக் கோணம் 90° இலும் கூடியதாக உள்ளதால் கீழே உள்ள மேற்பரப்பில் மேற்பரப்பிழுவிசை மேல் நோக்கித் தொழிற்படுகின்றது.

திரவ நிரலின் நிறை காரணமாக கீழ் மேற்பரப்பு நிலைக்குத்துடன் சிறிய கோணத்தை ஆக்குகின்றது.

கீழேயுள்ள மேற்பரப்பில் தொழிற்படும் மேற்பரப்பிழுவிசை மேலேயுள்ள மேற்பரப்பில் தாக்கும் மேற்பரப்பிழுவிசையையும் திரவநிரலின் நிறையையும் சமப்படுத்துவதால் திரவ நிரல் குழாயை விட்டு வெளியே கொட்டப்படுவதில்லை.



நீர் நிரலின் நிறை அதிகரிக்கும்போது கீழ் மேற்பரப்பு மேலும் வளைந்து ஒரு அரைக்கோள வடிவைப் பெறுகிறது. அச்சந்தர்ப்பத்தில் மேற்பரப்பிழுவிசை நிலைக்குத்தாக மேல் நோக்கித் தொழிற்படும். இதுவே மேற்பரப்பிழு விசையின் (மேல் நோக்கிய) உச்சப் பெறுமானமாகும்.

இவ்விசைகளைச் சமப்படுத்திச் சமநிலையில் இருக்கும் திரவ நிரலின் உச்ச உயரம் h எனக் கொள்வோம்.

திரவ நிரலின் நிறை $\pi r^2 h \rho g$

கீழ் நோக்கிய விசை $2\pi r T \cos 60$

மேல்நோக்கிய விசை $2\pi r T$

விசைகளின் சமப்படுத்தும்போது

$$2\pi r T \cos 60 + \pi r^2 h \rho g = 2\pi r T$$

$$\pi r^2 h \rho g = 2\pi r T(1 - \cos 60)$$

$$r h \rho g = 2\pi r T \times \frac{1}{2}$$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

$r h \rho g = T$

$h = T / r \rho g$

$= 0.5 / 0.01 \times 10^{-2} \times 1.2 \times 10^{4} \times 10$

$= 0.5 / 12$

$= 0.0416 \text{ m}$

$= 4.16 \times 10^{-2} \text{ m}$

3. திரவமொன்றுக்குரிய (a) தன்வெப்பக் கொள்ளளவு, (b) ஆவியாகலின் தன் மறைவெப்பம் ஆகிய பதங்களின் வரைவிலக்கணந்தருக.

ஒரு வெப்ப மின்வலுப் பொறிலிருட்சமொன்றின் (Thermal Electric Power Plant) மின் பிறப்பாக்கி ஒன்றினை சுழலியைச் சுழற்றுவதற்கு உயர் அமுக்கக் கொதி நீராவி பயன்படுத்தப்படுகிறது. இந்த உயர் அமுக்கக்கொதி நீராவியானது, உயர்ந்த அமுக்கத்தின் கீழ் நீரை 80 °C இலிருந்து 260°C இற்கு வெப்பமேற்றுவதன் மூலம் உண்டாக்கப்படுகிறது. இந் நிபந்தனைகளின் கீழ் நீர் 250°C இல் கொதிக்கிறது.

(1) இப்பொறிலிருட்சத்தில் செக்கனுக்கு 8 kg நீரை 260 °C இலுள்ள உயர் அமுக்கக் கொதி நீராவியாக மாற்றுவதற்குத் தேவையான வலுவை, மெகாவாற்றுக்களில் (MW) கணிக்க.

(11) நீருக்கு இடமாற்றப்படும் சக்தியினது 35% மாத்திரமே மின்சக்தியை உண்டாக்கப் பயன்படுகிறதாயின், ~~ஒரு மணித்தியாலத்தில் இவ்வலுப் பொறிலிருட்சத்தில் உண்டாக்கப்படும் மின் சக்தியினது மொத்த அளவு யாது?~~

(நீரினது தன் வெப்பக் கொள்ளளவு $= 4.2 \times 10^{3} \text{ J kg}^{-1} \text{ K}^{-1}$

நீரினது ஆவியாகலின் தன் மறை வெப்பம் $= 2.3 \times 10^{6} \text{ J kg}^{-1}$

கொதி நீராவியினது தன்வெப்பக் கொள்ளளவு $= 2.0 \times 10^{3} \text{ J kg}^{-1} \text{ K}^{-1}$

<u>விடை</u>

3. (a) திரவமொன்றின் ஒரு அலகு திணிவை 1°C வெப்பநிலையில் (1K) உயர்த்துவதற்குத் தேவையான வெப்பக்கணியம் அல்லது சக்தி தன்வெப்பக் கொள்ளளவு ஆகும்.

(b) கொதிநிலையில் உள்ள திரவத்தின் ஒரு அலகு திணிவுள்ள திரவத்தை வெப்பநிலையில் மாற்றம் இல்லாமல் திரவநிலையிலிருந்து வாயு நிலைக்கு மாற்றுவதற்குத் தேவையான சக்தி அல்லது வெப்பக் கணியம் ஆவியாகலின் மறை தன்மறை வெப்பம் எனப்படும்.

8 kg நீரை 80 °C இலிருந்து 260 °C இற்கு உயர்த்தத் தேவையான வெப்பக் கணியம் $= 8 \times 4.2 \times 10^{3} \times (260-80)$

260 °C இல் 8 kg நீரை நீராவியாக மாற்றத் தேவையான வெப்பக் கணியம் $= 8 \times 2.3 \times 10^{6}$

தேவைப்படும் மொத்தவலு $= 8 \times 4.2 \times 10^{3} \times 180 + 8 \times 2.3 \times 10^{6}$

$= 6.048 \times 10^{6} + 18.4 \times 10^{6}$

$= 24.448 \times 10^{6} \text{ W}$

$= 24.448 \text{ MW}$

மொத்த சக்தியின் 35% மின்சக்தியாக மாற்றப்படுகின்றது.

1 செக்கனில் உண்டாக்கப்படும் மின்சக்தி $= 24.45 \times \frac{35}{100} \text{ MW}$

~~1 மணித்தியாலத்தில் உண்டாக்கப்படும் மின்சக்தி $= 24.448 \times \frac{35}{100} \times 3600 \text{ MJ}$~~

$= 30.87 \times 10^{9} \text{ J}$

$= 30.87 \text{ GJ}$

www.aswanphysics.weebly.com

Scanned by CamScanner

4. போயிலின் விதியையும், சாள்சின் விதியையும் கூறி, இலட்சிய வாயு ஒன்றிற்குரிய

$\frac{PV}{T}$ = மாறிலி, என்ற தொடர்புடைமையைப் பெற அவற்றைப் பயன்படுத்துக.

T_1 வெப்பநிலையிலுள்ள m திணிவுடைய இலட்சிய வாயுவொன்றை ஒவ்வொன்றிலும் கொண்டுள்ள இரு சர்வசமனான பாத்திரங்கள், படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, புறக்கணிக்கத்தக்க கனவளவையுடைய ஒடுங்கிய குழாயொன்றினால் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பாத்திரத்தின் வெப்பநிலையை அதனது ஆரம்ப வெப்பநிலையான T_1 இல் வைத்து மற்றப் பாத்திரத்தின் வெப்பநிலை T_2 ஆக அதிகரிக்கப்படுகிறது. இப்பாத்திரத்தின் விரிவு புறக்கணிக்கத்தக்கதாயின், ஒரு பாத்திரத்திலிருந்து அடுத்ததிற்கு இடமாற்றப்படும் வாயுவினது திணிவு (Δm) ஐ



$$\Delta m = \frac{m(T_2 - T_1)}{T_1 + T_2}$$

எனத் தரப்படலாமெனக் காட்டுக.

விடை :-

போயிலின் விதி:

மாறா வெப்பநிலையில் உள்ள ஒரு குறிப்பிட்ட திணிவு இலட்சிய வாயுவின் கனவளவு அதன் அமுக்கத்திற்கு நேர்மாறு விகித சமமுடையது.

சாள்சின் விதி

ஒவ்வொரு பாகை சத-அளவை வெப்பநிலை ஏற்றத்திற்கும் மாறா அமுக்கத்தில் உள்ள ஒரு குறித்த திணிவு இலட்சிய வாயுவின் கனவளவு 0 °C இல் அதன் கனவளவின் $\frac{1}{273}$ பகுதியால் அதிகரிக்கும்

அல்லது,

மாறா அமுக்கத்தில் உள்ள ஒரு குறித்த திணிவு இலட்சிய வாயுவின் கனவளவு தனிவெப்ப நிலைக்கு நேர்விகித சமமானது.

T_1 தனிவெப்பநிலையில் P_1 அமுக்கத்தில் இருக்கும் V_1 கனவளவு வாயுவைக் கருத்திற் கொள்வோம்.



சாள்சின் விதிப்படி

P_1 மாறிலியாகையால்

$V_1/T_1 = V'/T_2$ ......(1)

$V' = V_1T_2/T_1$

போயிலின் விதிப்படி

T_2 மாறிலியாகையால்

$P_1V' = P_2V_2$ .... (2)

சமன்பாடு 2 இல் V' இற்குப் பிரதியிடும் போது

$$P_1V_1T_2/T_1 = P_2V_2$$

$\therefore P_1V_1/T_1 = P_2V_2/T_2$ எனவே PV/T மாறிலி

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner



ஆரம்ப அமுக்கம் P_1 எனவும் ஒரு குடுவை T_2 இற்கு வெப்பமாக்கப்பட்ட பின் அமுக்கம் P_2 எனவும் கொள்வோம்.

PV = mRT எனும் சமன்பாட்டைப் பயன்படுத்தினால்

ஆரம்பத்தில் A யில் உள்ள திணிவு m எனின் $m = P_1V/RT_1$

T_2 இற்கு வெப்பமாக்கிய பின் A யில் உள்ள திணிவு m_A எனின்,

$$m_A = P_2V/RT_2$$

வெப்பமாக்கிய பின் A, B ஆகியவற்றில் உள்ள மொத்தத் திணிவு 2 m

$$2m = P_1V/RT_1 + P_2V/RT_2$$

$$2m = P_2V/R\,(1/T_1 + 1/T_2) \quad ; \quad 2m = m_A \frac{(T_1 + T_2)}{T_1}$$

$$2m = \frac{P_2V}{R}\left(\frac{T_1 + T_2}{T_1T_2}\right)$$

$$= \frac{P_2V}{RT_2}\left(\frac{T_1 + T_2}{T_1}\right) \qquad m_A = \frac{2mT_1}{T_1 + T_2}$$

$$\Delta m = m - m_A$$

$$= m - 2mT_1/(T_1 + T_2)$$

$$= m\,(1 - 2T_1/(T_1 + T_2))$$

$$= m\frac{(T_1 + T_2 - 2T_1)}{T_1 + T_2} = \frac{m(T_2 - T_1)}{T_1 + T_2}$$

5. பகுதி (a) யிற்கு அல்லது பகுதி (b) இற்கு விடை தருக.

(a) ஒளி முறிவில் அவதிக்கோணம் என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

ஊசிகள், வரைதற் கடதாசி, கண்ணாடி அரியம், ஏனைய தேவையான பொருட்கள் ஆகியவை உமக்குத் தரப்பட்டிருப்பின், அவதிக் கோண முறையினால் கண்ணாடியின் முறிவுச் சுட்டிக்குரிய பெறுமானமொன்றை எவ்விதம் நீர் பெறுவீரென விவரிக்க.



காட்டப்பட்டவாறு செங்கோணக் கண்ணாடி அரியமொன்றினது (முறிவுச் சுட்டி = 1.52) AB முகத்தின் மீது ஒளிக்கதிரொன்று செவ்வனாகப் படுகிறது. இவ்வரியமானது நீரில் (முறிவுச் சுட்டி = 1.33) அமிழ்த்தப்பட்டுள்ளது. இக்கதிரானது முகம் AC யில் முற்றாகத் தெறிப்படையும் வகையிலான கோணம் θ (ACB) யினது மிகப் பெரிய பெறுமானத்தைக் காண்க.

(b) தொலைகாட்டியொன்றினது (1) 'ஏகபரிமாணப் பெரிதாக்கம்'

(1.1) 'கோணப் பெரிதாக்கம்' ஆகிய பதங்களின் வரைவிலக்கணந் தருக.

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

10 m , 3 m ஆகிய குவிய நீளங்களையுடைய இரு ஒருக்கும் வில்லைகளைக் கொண்டு ஒரு தொலைகாட்டியை வடிவமைக்கும்படி நீர் கேட்கப்படுகிறீர். இத்தொலைகாட்டியானது, பொருளிலிருந்து 100 m இலுள்ள பொருளொன்றின் அதன் இறுதி விம்பம் பார்வைத் துண்டிலிருந்து 1.0 m இல் உருவாகும் வகையில், பார்க்கக்கூடியதாக அமைய வேண்டும்.

(i) இப்பொருளிலிருந்து கண்வரைக்குமான ஒளிக்கதிர்களின் பாதையைக் காட்டும், இத்தொலைகாட்டிக்கூடான, கதிர் வரிப்படமொன்றை வரைக.

(ii) இவ்விரு வில்லைகளுக்குமிடையிலான வேறாக்கத்தைக் காண்க.

(iii) தொலைகாட்டியின் ஏகபரிமாணப் பெரிதாக்கத்தையும் கோணப் பெரிதாக்கத்தையும் கணிக்க.

விடை :-

5. (a) ஒளியில் அடர்ந்த ஊடகம் ஒன்றினுள் செல்லும் ஒளிக்கதிர் ஒளியில் ஐதான ஊடகத்தையும் அடர்த்தியான ஊடகத்தையும் பிரிக்கும் மேற்பரப்பில் ஒரு குறிப்பிட்ட படுகோணத்தில் படும்போது முறிகதிர் பிரிக்கும் மேற்பரப்பை மருவி வெளியேறும். இந்நிலையில் உள்ள படுகோணம் அவ்வூடகங்களுக்குரிய அவதிக் கோணம் எனப்படும்.





அரியம் - வரைபடத்தாள் மீது வைக்கப்பட்டு புற உரு வரையப்பட்டது. ABC P எனும் ஊசி முகம் AB ஐத் தொட்டுக்கொண்டிருக்கத்தக்கவாறு வரைபடத்தாளிற்குச் செங்குத்தாக ஊன்றப்படுகின்றது. BC இல் முழு உட்தெறிப்படைவதால் உண்டாகும் P இன் விம்பத்தை AC இனூடு நோக்கிக் கொண்டு கண் C- ஐ நோக்கி அசைக்கப்படும் போது P இன் விம்பம் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டு மட்டாக மறையும் இச்சந்தர்ப்பத்தில் P யின் விம்பத்துடன் நேர்கோட்டில் இருக்கத்தக்கதாக R, S எனும் இரண்டு ஊசிகள் வரைபடத்தாளிற்குச் செங்குத்தாக ஊன்றப்படுகின்றன.

இதன் பின் அரியத்தை அகற்றி SR, AC எனும் முகத்தை Q இல் சந்திக்கும் வரை நீட்டப்படுகிறது.

P யிலிருந்து BC இற்கு ஒரு செங்குத்து வரைந்து PO = OI ஆக இருக்கும் வண்ணம் I எனும் புள்ளி குறிக்கப்படுகின்றது.

QI இணைக்கப்படுகின்றது.

QI, BC ஐ வெட்டும் புள்ளி X, P இற்கு இணைக்கப்படுகிறது.

PXQRS என்பதே ஒளிக்கதிரின் பாதையாகும்.

$P\hat{X}Q = 2 \times$ அவதிக் கோணம்

எனவே அவதிக்கோணம் $= P\hat{X}Q / 2$

முறிவுச் சுட்டி $= \dfrac{1}{\text{சைன் } C}$ $\dfrac{1}{\text{சைன் } \frac{P\hat{X}Q}{2}}$



AC எனும் முகத்தில் படும் கதிர் முழுவுட் தெறிப்படைவதற்கு கண்ணாடி நீர் சார்பான அவதிக்கோணம், C = 90 − θ ஆக இருத்தல் வேண்டும்.

n சைன் i = மாறிலி

n_1 சைன் $C = n_2$ சைன் 90

$1.52 \times$ சைன் $C = 1.33 \times$ சைன் 90

சைன் $C = \frac{1.33}{1.52}$

$C = 61^\circ\ 3'$

$C = 90 - \theta$

$61^\circ\ 1' = 90 - \theta$

$\theta = 28^\circ\ 57'$

5. (b) ஏகபரிமாணப் பெரிதாக்கம் என்பது (கண் வில்லையினால் உருவாக்கப்படும்) இறுதி விம்பத்தின் உயரத்திற்கும் பொருளின் உயரத்திற்குமுள்ள விகிதமாகும்.

கோணப் பெரிதாக்கம் என்பது (கண்வில்லையால் உருவாக்கப்படும்) இறுதி விம்பம் கண்ணில் எதிரமைக்கும் கோணத்திற்கும் பொருள் கண்ணில் எதிரமைக்கும் கோணத்திற்குமுள்ள விகிதம்



(11) $1/V - 1/U = 1/f$ எனும் சமன்பாட்டைப் பொருள் வில்லைக்குப் பிரயோகிக்கும் போது

(குவிவுக்கு வில்லையிலிருந்து படுகதிரின் திசைக்கு எதிராக அளக்கப்படும் தூரங்கள் நேர்ப்பெறுமானமுள்ளவை)

$1/V - 1/100 = -1/10$

$V_1 = -100/9$ m

கண்வில்லைக்கு,

$1/V - 1/U = 1/f$; $1/1 - 1/U_2 = -1/3$; $U_2 = 3/4$ m

வில்லைகளுக்கிடைப்பட்ட தூரம் $= \left(\frac{100}{9} + \frac{3}{4}\right)$ m

$= 11.86$ m

ஏக பரிமாணப் பெரிதாக்கம் $= h''/h = h''/h' \times h'/h$

$= \frac{|V_2|}{|U_2|} \times \frac{|V_1|}{|U_1|}$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

$$= \frac{1}{3/4} \times \frac{100}{9\ 100}$$

$$= \frac{4}{27}$$

$$= 0.15$$

கோணப்பெரிதாக்கம் $= \frac{h''}{1} \div \frac{h}{100}$

$$= h''/h \times 100$$

$$= \frac{4}{27}\ 100$$

$$= 14.8$$

6. பரிவு என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.
அதிரும் இசைக்கவையொன்று, மாறும் அளவு நீரைக் கொண்டுள்ள ஒடுங்கிய குழாயொன்றுக்கு மேல் பிடிக்கப்படும்போது, வளி நிரலின் அடுத்தடுத்த நீளங்கள் 0.359 m உம் 1.079 m உம் ஆகும்போது பரிவுகளைக் கொடுப்பதாகக் காணப்படுகிறது. வேறுபட்ட பரிசோதனையொன்றில், இவ்விசைக் கவை 234 Hz மீடிறனுடைய இரண்டாவது இசைக்கவையொன்றுடன் ஒன்றாக ஒலிக்கச் செய்யப்படும்போது 4 Hz அடிப்புகளைக் கொடுக்கிறது. இந்த இரண்டாவது இசைக் கவையும் மேற்கூறப்பட்ட வளிநிரல்களுடன் அவற்றின் நீளங்கள் சிறிது அதிகரிக்கப்படும்போது, பரிவைக் கொடுக்கிறது. இக்குழாயின் முனைத் திருத்தத்தையும், வளியில் ஒலியின் கதியையும் காண்க.

விடை:-

6. பரிவு– அதிரும் பொருளினதும் பிரயோகிக்கும் விசையினதும் அதிர்வெண்கள் சர்வசமனாகும் இருப்பின் பிரயோகிக்கும் விசை பொருளை அதிரச் செய்யும் போது பொருள் உயர் வீச்சத்துடன் உடனடியாக அதிரும். அதாவது உச்ச சக்தி அத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும்.
முனைத் திருத்தம் e எனக் கொள்வோம்.

(1)  (11)

(1) $\frac{\lambda}{4} = 0.359 + e$

(11) $\frac{3\lambda}{4} = 1.079 + e$

$$\frac{\lambda}{2} = 0.720$$

$$\lambda = 1.440\ m$$

$$e = \frac{\lambda}{4} - 0.359$$

$$= \frac{1.440}{4} - 0.359$$

$$= 0.360 - 0.359$$

$$= 0.001\ m$$

முதலாம் இசைக்கவரின் மீடிறன் $= 234 \pm 4$

$= 238$ அல்லது 230

இரண்டாம் இசைகவரின் அலைநீளம் > முதலாம் இசைக்கவர்

எனவே இரண்டாம் இசைக்கவரின் மீடிறன் < முதலாம் இசைக்கவரின் மீடிறன்

முதலாம் இசைக்கவரின் மீடிறன் 238 Hz

வளியின் ஒலியின் வேகம் $= n\lambda$

$$= 238 \times 1.440$$

$$= 342.7\ m\,s^{-1}$$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

7. பகுதி (a) யிற்கு அல்லது பகுதி (b) இற்கு விடை தருக.

(a) வோல்ற்றுமானியொன்றை அம்பியர்மானியொன்றைப் பயன்படுத்த எவ்விதம் அதனை நீர் திரிவுபடுத்துவீர்?

தெரியாத அகத்தடையையுடைய வோல்ற்றுமானியொன்று 10 Ω தடையினொன்றுக்கு குறுக்கே தொடுக்கப்பட்டு, இத்தடை – வோல்ற்றுமானிச் சேர்மானத்தினூடாக 0.22 A ஓட்டமொன்று செலுத்தப்படுகிறது. இவ்வோல்ற்றுமானி 2 V ஐ வாசிக்குமாயின், இவ்வோல்ற்றுமானியினது அகத்தடையைக் கணிக்க.



(1) படத்தில் காட்டப்பட்டுள்ள வலைவேலையின் புள்ளிகள் C யிற்கும் D யிற்குமிடையில் மேற்குறிப்பிட்ட வோல்ற்றுமானியானது இப்போது இணைக்கப்படுமாயின், இவ் வோல்ற்றுமானியிலுள்ள வாசிப்பு என்னவாயிருக்கும்? (12 V கலமானது புறக்கணிக்கத்தக்க அகத்தடையைக் கொண்டிருப்பதாகக் கருதுக.)

(11) மேலே (1) இல் உள்ளவாறு இவ்வோல்ற்றுமானி இணைக்கப்பட்டிருக்கும் போது, சார்பாக A யினதும் B யினதுமுள்ள அழுத்தங்களைக் கணிக்க.

(111) இவ்வோல்ற்றுமானி இணைப்பறுக்கப்படும்போது D சார்பாக A, B, C ஆகியவற்றிலுள்ள அழுத்தங்கள் என்னவாயிருக்கும்?

(1V) (111) இல் பெறப்பட்ட அழுத்தப் பெறுமானங்களை (1) இலும் (11) இலும் கணிக்கப்பட்ட ஒத்த பெறுமானங்களுடன் ஒப்பிட்டு, வித்தியாசங்கள் ஏதுமிருப்பின், அவற்றை விளக்குக.

(v) (1) இலும் (11) இலும் பெறப்பட்ட பெறுமானங்கள் (111) இல் பெறப்பட்ட ஒத்த பெறுமானங்களுக்கு ஏறக்குறையச் சமமாயிருப்பதை எவ்விதம் நீர் நிச்சயப்படுத்துவீர்?

(b) மின்னியல் வலைவேலையொன்றுக்குரிய கிர்கோப்பின் விதிகளைக் கூறுக.



காட்டப்பட்டுள்ள சுற்றில், X ஆனது 2 μF கொள்ளளவத்தையுடைய கொள்ளளவியொன்றும்; ஏனையவைகள் பின்வரும் பெறுமானங்களைக் கொண்டுள்ளன.

$R_1 = 10\,\Omega$ $R_2 = 20\,\Omega$

$R_3 = 30\,\Omega$ $R_4 = 40\,\Omega$

$E_1 = 2.0\,V$ $E_2 = 6.0\,V$

கலங்கள் புறக்கணிக்கத்தக்க அகத்தடைகளைக் கொண்டுள்ளனவெனக் கருதுக.

(1) கொள்ளளவியானது முழுமையாக ஏற்றஞ் செய்யப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு தடையினூடுமான உறுதி ஓட்டத்தைக் காண்க.

(11) கொள்ளளவியில் சேமிக்கப்பட்ட ஏற்றம் யாது?

விடை :-

7. (a)



உயர் தடை ஒன்றை அம்பியர் மானியுடன் தொடர் நிலையில் தொடுத்தல்.

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner



வோல்ற்றுமானியின் தடையை R எனக் கொள்வோம். வோல்ற்றுமானி தடை சேர்மானத்தின் மொத்தத்தடை r எனின்,

$1/r = 1/R + 1/10$

$r = 10R/(R + 10)$

$$\text{மின்னோட்டம்} = \frac{\text{அழுத்த வித்தியாசம்}}{\text{தடை}}$$

$$0.22 = \frac{2\,(R + 20)}{10\,R}$$

$2.2\,R = 2R + 20$

$0.2\,R = 20$

$R = 100\,\Omega$



CD இற்கிடையே வோல்ற்றுமானி தொடுக்கப்பட்டுள்ள போது CD இன் விளையுள் தடை R_{CD} எனின்,

$1/R_{CD} = 1/400 + 1/100$

$R_{CD} = 400/5 = 80\,\Omega$

$$\text{சுற்றிலுள்ள மின்னோட்டம்} = \frac{12}{560 + 560 + 80}$$

$$= \frac{12}{1200} = 0.01\ A$$

வோல்ற்றுமானி வாசிப்பு = IR

$= 0.01 \times 80 = 0.8\ V$

(ii) A யின் அழுத்தம் = 12 V

B யின் அழுத்தம் = $640 \times 0.1 = 6.4\ V$

(iii) வோல்ற்றுமானி இணைப்பு அகற்றப்படும்போது,

A யின் அழுத்தம் 12 V

$$\text{B யின் அழுத்தம்} = \frac{12 \times 960}{(560 + 560 + 400)}$$

$$= \frac{12}{1520} \times 960\ V$$

$= 7.6\ V$

$$\text{C யின் அழுத்தம்} = \frac{12}{1520} \times 400\ V$$

$= 3.15\ V$

(iv) (i) இல் அழுத்தம் A = 12 V B = 6.4 V C = 0.8 V

(ii) இல் அழுத்தம் A = 12 V B = 7.6 V C = 3.15 V

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

வோல்ற்றுமானி இணைப்பு அகற்றப்படும்போது B, C ஆகியவற்றின் அழுத்தங்கள் அதிகரிக்கின்றன. இதற்குக் காரணம் - வோல்ற்றுமானி இணைக்கப்பட்டிருக்கும் போது C, D இற்கிடையே உள்ள விளையுள் தடை குறைவாக உள்ளது.

(v) 400 Ω தடையுடன் ஒப்பிடும்போது மிக உயர்ந்த அகத்தடையுள்ள வோல்ற்றுமானியைப் பயன்படுத்தினால் (111) இல் பெற்ற பெறுமானங்கள் பெறப்படும்

7. முதலாம் விதி:

(b)



எந்த ஒரு மின்சுற்றிலும் ஏதாவது ஒரு சந்தியில் மின்னோட்டத்தின் அட்சரகணிதக் கூட்டுத்தொகை பூச்சியம்

$$I_1 + I_2 = I_3$$

இரண்டாம் விதி:

எந்த ஒரு மூடிய சுற்றிலும் அச்சுற்றிலுள்ள மின்இயக்க விசைகளின் அட்சரகணிதக் கூட்டுத்தொகை அச்சுற்றில் உள்ள தடைகளை அதனூடு பாயும் மின்னோட்டத்தாற் பெருக்கி வரும் பெறுமானங்களின் அட்சரகணிதக் கூட்டுத்தொகைக்குச் சமம்.



உறுதி நிலையில் ஒமக்கியினூடாக மின்னோட்டம் பாய்வதில்லை.

எனவே R_3 இனூடு பாயும் மின்னோட்டம் 0

ஏனைய தடைகளினூடு படத்திற் காட்டியவாறு மின்னோட்டம் பாய்கின்றது எனக் கொள்வோம்.

$$I = I_1 + I_2 \quad \ldots\ldots\ldots \quad (2)$$

GABCH எனும் சுற்றைக் கருதுவோம்.

$$6 = 10I + 20I_1 \quad \ldots\ldots\ldots\ldots (2)$$

GBDCH எனும் சுற்றைக் கருதுவோம்

$$6 + 2 = 10I + 40I_2 \quad \ldots\ldots\ldots\ldots (3)$$

$$2 \times (2) \Rightarrow 12 = 20I + 40I_1 \quad \ldots\ldots\ldots\ldots (4)$$

$$(3) + (4) \quad 20 = 30I + 40(I_1 + I_2)$$

$$20 = 70I$$

$$I = \frac{2}{7} \text{ A}$$

சமன்பாடு (2) இல் பிரதியிடும் போது

$$6 = 10 \times \frac{2}{7} + 20I_1$$

$$I_1 = \frac{22}{7} \times \frac{1}{20}$$

$$= \frac{11}{70} \text{ A}$$

www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner

$I_2 = \frac{2}{7} - \frac{11}{70}$

$= -\frac{9}{70}$ A

X இற்குக் குறுக்கேயுள்ள அழுத்த வித்தியாசம் V_x எனக் கொள்வோம்.

ABDA எனும் சுற்றிற்கு

$R_1 I = 2.0 + V_x$

$V_x = 2.0 - R_1 I$

$= 2.0 - 10 \times 2/7$

$V_x = -6/7$ volt.

சேமிக்கப்பட்டுள்ள ஏற்றம் = CV

$= 2\mu F \times (-6/7) = 2\ F \times (-\frac{6}{7})$

$= -12/7\ \mu C$

8. மின்னோட்டம் I ஐக் கொண்ட நீண்ட நேர்க் கம்பி ஒன்றிலிருந்து r இல் உள்ள காந்தப் பாயவடர்த்தி B யிற்கான கோவை ஒன்றை எழுதுக.

C, D எனும் நீண்ட சமாந்தரமான இரு நேர்க் கம்பிகள் 1.0m இடைத்தூரத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேற் கம்பியானது உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு தாளின் உள்நோக்கி 6A எனும் ஒரு மின்னோட்டம் I_1 ஐக் கொண்டு செல்கிறது.

(1) P யிலே காந்தச் சூனியப் புள்ளி ஒன்றை உண்டாக்குவதற்குக் கீழ்க் கம்பியிற் பாய வேண்டிய மின்னோட்டம் I_2 இன் பருமனும் திசையும் யாவை?

(11) மேலே (1) இற் குறிப்பிட்ட நிலைமையில் Q, S ஆகிய புள்ளிகளில் உள்ள விளையுட் பாய அடர்த்திகளைக் காண்க.

(111) மின்னோட்டம் I_2 புறமாற்றப்படும்போது S இல் உள்ள காந்தப்பாய அடர்த்தியின் புதிய பருமனையும் திசையையும் காண்க.

$\mu_0 = 4\pi \times 10^{-7}$ T A^{-1} m



(புவியின் காந்தப் புலத்தின் விளைவுகளைப் புறக்கணிக்க.)

விடை:-

8. $B = \mu_0 I/2\pi r$

$\mu_0 = 4\ \ \times 10^{-7}$ T A^{-1} m

I = மின்னோட்டம்

r = தூரம்.

Scanned by CamScanner



I_1 காரணமான காந்தப்பாய அடர்த்தி

$$B_1 = \frac{\mu_0 \cdot 6}{2\pi \times 1.5}$$

P யில் காந்தப் பூச்சியப்புள்ளி உண்டாவதற்கு I_2 காரணமான காந்தப்பாய அடர்த்தி இதற்கு நேர் எதிர்த் திசையில் வலப் பக்கத்தை நோக்கியிருத்தல் வேண்டும்.

எனவே I_2 என்னும் மின்னோட்டம் மேல் நோக்கிப் பாய வேண்டும்.

$$B_2 = I_2/2\pi \times 0.5$$

காந்தப் பூச்சியப்புள்ளியில் $B_1 = B_2$

எனவே $\frac{\mu_0 \times 6}{2\pi \times 1.5} = \frac{\mu_0 \times I_2}{2\pi \times 0.5}$ $\qquad I_2 = 2A$

Q இல் உள்ள மொத்தக் காந்தப்பாய அடர்த்தி

$$= \frac{\mu_0 6}{2\pi \times 0.5} - \frac{\mu_0 \times 2}{2\pi \times 1.5}$$

$$= \frac{\mu_0}{2\pi}(12 - 2/1.5)$$

$$\frac{4\pi \times 10^{-7}}{2\pi} \times \frac{32}{3}$$

$$= 64/3 \times 10^{-6}\ T$$

$$= 2.13 \times 10^{-6}\ T$$

ஆனால் $DS = \sqrt{0.5^2 + 0.5^2}$

$$= \sqrt{0.5}$$

I_1 காரணமாக S இல் உள்ள காந்தப்பாய அடர்த்தியின் பருமன்

$$B_3 = \mu_0 6/2\pi\sqrt{0.5}$$

I_2 காரணமாக S இல் உள்ள காந்தப்பாய அடர்த்தியின் பருமன்; $B_4 = \frac{\mu_0 \times 2}{2\pi\sqrt{0.5}}$

இவை இரண்டும் செங்கோணத்தில் உள்ளன. எனவே விளையுள் காந்தப்பாய அடர்த்தி

$$= \sqrt{B_3^2 + B_4^2}$$

$$= \sqrt{\left(\frac{\mu_0}{2\pi}\right)^2 \frac{36}{0.5} + \left(\frac{\mu_0}{2\pi}\right)^2 \frac{4}{0.5}}$$

$$= \frac{\mu_0}{2\pi}\sqrt{72 + 8}$$

$$= \frac{\mu_0}{2\pi}\sqrt{80}$$

$$= \frac{4\pi \times 10^{-7}}{2\pi}\sqrt{80}$$

$$= 2 \times 10^{-7} \times \sqrt{80}$$

$$= 1.79 \times 10^{-6}\ T$$

மின்னோட்டத்தின் திசை மாற்றப்படும்போது காந்தப்பாய அடர்த்தியின் பருமன் மாறாது திசையில் மாற்றம் ஏற்படும்.



www.aswarphysics.weebly.com

Scanned by CamScanner